## ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்று தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீடமைப்பு உதவிக் கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 14,107,356 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 149,069,560 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திருப்பி அனுப்பப்பட்ட கல்வி உதவியான ரூபா 10,950 தொகை வீடமைப்பு உதவி திருப்பி அனுப்பியதாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையினால் அந்த அளவினால் கல்வி உதவி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வீடமைப்பு உதவி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது திறைசேரியிலிருந்து கிடைத்த மானியம் ரூபா 30,183,329 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 28,686,999 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டில் கிடைக்க வேண்டிய வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,496,330 தொகை மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் கிடைத்த வருமானம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 2,280,815 கூட்டுத்தொகையான உதவி உபகரணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக கொடுப்பனவு செய்யப்படாதிருந்தும் அச்செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(உ) 2006 செப்தெம்பர் 02 அந் திகதி முதல் 2009 யூலை 29 ஆந் திகதி வரையான காலத்தில் 28 நோயாளர்களுக்காக வைத்திய உதவியாக சனாதிபதி நிதியத்திலிருந்து கிடைத்த ரூபா 500,000 தொகை வைத்திய உதவிச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையினால் வைத்திய உதவி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் வீடமைப்பு உதவிப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 21,840,695 தொகையான மீதி காணப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசேட்டில் காணப்பட்ட மீதி ரூபா 20,636,908 ஆனமையால் ரூபா 1,203,787 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மை காரணமாக அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| | விபரம் | பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | ஊனமுற்றோர் உபகரணங்கள் | | | |
| | சக்கர நாற்காலி | 190,350 | (i) | விண்ணப்ப படிவம் |
| | கைப்பிடி | 53,280 | (ii) | வைத்திய அறிக்கை |
| | ஊன்றுகோல் | 102,000 | (iii) | வழங்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்று |
| (ஆ) | அட்டுறு செலவினம் | 11,573,058 | | பதிவேடு |
| | | 14,032,308 | | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 01 |
| (இ) | நாட்குறிப்புப் பதிவுகள் | 9,560,338 | | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் |

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப் பிரமாணம் | | |
| நி.பி 135 | -- | நிதிக்கட்டுப்பாடு தொடர்பான செயற்பாடுகள் இரண்டு பேர்களுக்கு மேற்பட்டவர்களின் பரீட்சிப்பிற்கு உள்ளாகும் வகையில் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் பகிரப்பட வேண்டிய போதிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்பாடுகள் ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | | (i) காசேட்டைப் பராமரித்தல்<br>(ii) செலவினப் பேரேடு<br>(iii) வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்தல்<br>(iv) காசோலை எழுதுதல்<br>(v) பீஜவீ தயாரித்தல் |
| நி.பி 245 | 243,800 | 07 உறுதிச்சீட்டுக்களின் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்படவில்லை |
| நி.பி 260(1) | 651,900 | (i) உறுதிச்சீட்டுக்களில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு அல்லது அவர்களின் சட்டரீதியான முகவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறல்லாத நபர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| நி.பி 262 | | (ii) காசேட்டில் பதியப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| நி.பி 394(ஆ)11 | | வழங்கப்பட்ட காசோலைகளின் செல்லுபடிக் காலத்தை நீடிக்கும் போதும் காசோலைகளை இரத்துச் செய்யும் போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 396(ஈ) | 50,000 | வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 3,621,879 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 389,761 ஆகக் காணப்பட்மையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகளில் ரூபா 3,232,118 தொகையான அதிகரிப்பைக் காட்டியது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கின் படி சுபிரி வாசனா வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களும் உதவிகளும் முறையே ரூபா 142,708,955 , ரூபா 1,211,969 இனால் அதிகரித்தமை இதற்கான காரணங்களாக இருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் மன்றத்தின் செயற்பாடுகளுக்காக நிதி ஈடுபடுத்தலின் பகுப்பாய்வின் பிரகாரம் மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல் வழமைக்கு மாற்றமாக 516 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறைசேரி அங்கீகரித்த செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளுக்காக ரூபா 2,268,672 தொகை மன்றத்தின் நிதியத்திலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சுய தொழில் உதவி

2012 ஆம் ஆண்டின் போது 446 நபர்களுக்கு சுய தொழில் உதவியாக ரூபா 7.5 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊனமுற்றோர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் அமைப்பிற்கான உதவி

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 98 தொண்டர் அமைப்புக்கள் மன்றத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ஊனமுற்றோரின் நிலைமையினை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை மேற்பார்வை செய்தல், தொடர்புபடுத்துதல் மற்றும் தேவையான சிபார்சுகளைச் சமர்ப்பித்தல் என்பவற்றைச் செய்யவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை

(ii) ஊனமுற்றோருக்கான நுழைவு வசதிகளை வழங்குவதல் தொடர்பாக 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 1619/24 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தற்போது காணப்படுகின்ற சகல கட்டிடங்கள், பொது இடங்கள் மற்றும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் என்பன 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதிக்கு முன் ஊனமுற்றோருக்கான நுழைவு வசதிகளை வழங்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆரம்பித்து 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மாவட்ட மட்டத்தில் தேவையான தகவல்களைத் திரட்டி நடைமுறைப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து அதற்கமைய செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) ஊனமுற்றோருக்கும் அவ்வாறானவர்களுக்கும் வழங்கக்கூடிய சேவைகள் தொடர்பாக சரியான தரவுப் பதிவேடுகளைப் பேணுதல்.

(ii) ஊனமுற்றதற்கான பிரதான காரணம், அவற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதலுக்காக வினைத்திறனான படிமுறைகளை விருத்திசெய்தல்.

(iii) ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வு நிலையங்களை தோற்றுவித்து பராமரித்தல்.

(iv) ஊனமுற்றோருக்கு கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குதல்.

(v) அறிவித்தல்களைப் பிரசுரிப்பதன் மூலம் அவர்களின் நிலைமை மற்றும் தேவைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவித்தல்.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி தனியார் நிறுவனத்திலிருந்து ரூபா 2,564,648 பெறுமதியான 22,696 மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 13,749,353 பெறுமதியான 95,392 மூக்குக் கண்ணாடிகள் நலனாளிகளினால் கையேற்கப்பட்டமைக்கோ அல்லது மூக்குக் கண்ணாடிகள் பகிர்ந்தளித்த விபரங்களை உள்ளடக்கி பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட சகல நலனாளிகளுக்கும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டமைக்கு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டிருக்க வில்லை.

### 3.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வீடமைப்பு உதவி செலுத்துவதற்காக விண்ணப்பிக்காமையினால் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 17,705,984 தொகை எஞ்சியிருந்தது.

(ஆ) உலக சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 685,400 தொகை மீளாய்வாண்டில் எச்செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பதவியணியினர்

மன்றத்தின் அங்கீகரித்த ஐந்து பதவியணிப் பதவிகளில் மூன்று பதவிகளுக்காக மாத்திரம் பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் பதின்மூன்று உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். 2011 மே 24 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் 8(iv) ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பததவியணியினருக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

சமூக சேவைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டின் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்குமிடையே 32 சதவீதத்திற்கும் 128 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

(அ) 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழு கூட்டத்தின் கட்டளையின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் வீடமைப்பு உதவிக்காக தனிப்பட்ட கணக்கை ஆரம்பிக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறான வங்கிக் கணக்கு கணக்காய்வுத் திகதியான 2013 மே 20 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவின் பிரகாரமும் 2011 மே 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் 7 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரமும் நடைமுறைக் கணக்கிலுள்ள மிகையான காசு மீதியை ஏழு நாள் வைப்புக்களில் முதலீடு செய்தல் தொடர்பாக கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அது 2012 சனவரி மாதத்தின் போதே அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னருள்ள மாதங்களில் மிகையான பணம் காணப்பட்ட போதிலும் எந்த முதலீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) உதவிகளை வழங்குவதில் கட்டுப்பாடு

(ஆ) முதலீடு செய்தல்

(இ) கணக்கீடு